800 800
11 FEB 1937

உ

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பிரகாச வள்ளலார்

ஜாதகம்

கந்தர்நாடி - காக்கேயர் மகாவாக்கியம்

சென்னை

சமரச சுத்தசன்மார்க்க சங்கம்

100, அம்மன்கோயில்தெரு, ஒற்றைவாடைபோஸ்டு,

சென்னை.

தாது௵] 26—1—37 [தைப்பூசம்

முன்னுரை

சன்மார்க்கச் சோதரர்காள்!

திருவருட்பிரகாச வள்ளற் பெருமானின் ஜாதகத்தின் மேல் உள்ள அவாவினுல், அன்பர், கா-பரமக்குடி சோதிடர் இராமசாமிபிள்ளை அவர்கள் புதல்வர் சோதிடக் களஞ்சியம் R. சண்முகம்பிள்ளை அவர்களைக்கொண்டு பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து ஆராய்ந்து எடுத்து சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் சார்பாக அச்சிடப்பட்டது. சன்மார்க்க உலகம் ஆதரிக்குமாக.

சன்மார்க்கத் தொண்டன்

பண்ருட்டி மேலருங்குணம்-மடம்

குமார சுவாமி அய்யர் குமாரர்

26-1-37. **வீரய்யர்.**

பொற்பாதம்

பொன்னம் பலவர் மலரடிகையப் போற்றுகின்ற
இன்பன் வடலூர் இராமலிங்கன்—நன்சரிதை
எடுத்திட்டான் வீரய்யா ஏட்டி லிருந்தே
படித்து மகிழ வென்றே பார். 1

சண்முக சோதிட சாலையில் ஆறுமுகம்
உண்மை விளங்க உலகினுக்கு—எண்ணரிய
ஏட்டோலை தன்னை எடுத்துதவி தான்செய்தான்
நாட்டோர்க்கு நல்லமுத மென்று. 2

10 FEB 1937
MADRAS

ஓம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

ஸ்ரீமத் சிதம்பரம்

இராமலிங்க சுவாமிகள்

ஜாதகம்

ல		சனி	குரு
	இராசி		செ-கே
ரா			
		சந்-பு	சூ-சு

23-ஆவது பரி விருத்தி கலியுகாதி வருடம் 4925 இங்கிலீஷ் 1823ம் வருஷம் அக்டோபர் மாதம் 5.ம் தேதி சுபானு வருஷம் புரட்டாசி மாதம் 21ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பூர்வபட்சம் துவிதியை திதி சித்திரை நட்சத்திரம் சூரிய உதயாதி நாழிகை 29, வினாடி 21, தர்ப்பரை 6-க்கு மீனலக்கினத்தில் ஜெனனம் சுபம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கந்தர் நாடி வாக்கியம்

ஓமென்ற அட்சரத்தி னுண்மையாகி
உயிராகி உடலாகி உருத்திரமாகி
ஆமென்ற ஒருபொருளாய் இலங்கும்நாத
அத்வீத சுத்தமதாய் அமைதியாகி
தாமென்ற செயல்நீங்கி ஓங்காரத்துள்
தானமைந்து சுடலையதில் சுடலையாக
காமித்த நாதனருள் பதம்சீர்போற்றி
கௌரியென தன்னையரே கழறக்கேண்மோ. 1

57
133·5

கேளோரு மானிடமுறையி லுற்றுஆதி
கிட்டிய ஞானபதத்தின் முதன்மைகண்ட
பாலனொரு மாபறையின் றுரைப்பே ஞதி
பதமதுகேள் ஆவிகடை ராசியாக
காலனிடபத்தில் அமைச்சன் யாழ்குந்த
கருங்கொடிசேய் கண்டரிவை கவிசூராக
ஆலோன்மால் தூக்கதனில் அதற்கீர்ராகு
அமையும்நாள் சுபானுகன்னி மூவேழ்தேதி 2

தேதிஇரண்டாம் திதி சித்திரை நட்சத்திரத்தில்
ஜெனிப்பு உதயாதி இருபத்தி ஒன்பது நாழி
மீதி யிருபத்தோர் விகடி ஆறு தர்ப்பரையில்
மிக்க இவ்விதம் சேர் நாள் கணக்கராக
நீதியந்த நற்குலத்தி லுற்பத்தியான
நிட்கருணை ராமலிங்கப் பேரைச்சூடி
ஆதிலமர் மருதூர்முன் கண்டாலும்பின்
அமையும்தில்லை க்ஷேத்திரமா யமையுமிந்த 3

இந்த மைந்தன் சோதரர் முன்னக்கை மூத்தோன்
ஏர்ப்படப்பின் கடையாப்பூ வதனிலுற்ற
தந்தைதாய் பாலியத்தில் பரமன்பாதம்
தான்பற்றி மரணமுறப் பாலன்நல்ல
சிந்தையுடன் கண்டதிக நுட்பம் தோற்றி
சிறுவயதில் ஞானகலை யோகம் சிற்ருய்
வந்தாலும் கர்மவினைப் பற்றினுலே
வனிதைதனைக் கைப்பிடித்தா னகத்தினுசை 4

ஆசைவிட்டும் ஐயையுள் அதனைத்தள்ளல்
அகற்றிடமுடியா திருந்தும் ஐயார்மேலே
பாசவினை பற்றற்று பரமஞானப்
பதம்கொண்டந் தகத்தினுட் பான்மையெல்லாம்
நேசமதைக் கைவிட்டத் வீகமார்க்கம்
நீடித்த தன்மையுற வெளிக்கிளம்பி
தேசசஞ்சாரப் பலனுய்த் திரிந்தும்
தெளியாதசித்த முள்ளவர்க்குத் தேசியாகி. 5

ஆதிஞானப் போதம்கண் டிகபரத்தின்
அமைப்புற்று அரனரி யெல்லா மொன்றென்று
ஏக பொருளதைச் சாடிப் பலர்க்குபதேசம்
ஈதுரைத்து வேறுநினைவு சந்தேகமார்க்கம்
போக்கிச் செய்தே பலவாறு புனித நீதி
புகன்று சதா பக்தியதாய்ப் போற்றுமாதி
யோக மெக்காலமும் சிந்தித்தந்த
நுட்பமதை யாராய்ச்சி கொண்டலைந்து 6

அவ்வகையாய்ப் பலன்தெரியா ஆத்மநாதம்
அடைவதற்கு அகம்போக்க ஆதி யெம்பால்
எவ்வகைகொள் ளாதரவு சித்தமுள்ள
இயல்போனுக்கே யிகத்திலிட மில்லாது

துவ்வினை கொண்டகப் பாசப் பற்றோர்க் கேது
சூட்சத்தை யிவனுரைத்தே உத்தமனுக்
மூவ்வகைகால மறிந்தே யெவர்க்கும்சொல்ல
உள்ளவனு மறிகுவாய் கிரகரீதி 7

நீதியோன் அன்பது வயதடுத்து
நிலைக்கும் வடலூர் மேடாய் நிகழ்ச்சி தோற்ற
ஜோதியாம் தன்பதி கொண்டதனில் தானும்
தூய்மையா யடக்கமுற மூலாதாரப்
போதிய சாரூபபதி யெக்யமாகி
புகுந்தமயம் நாற்றமுள்ள அவ்வுயிரதனை
நீதியாத் தாங்கிய வச்சடலத்திற்கும்
நிலைத்ததொரு ஆனந்தப் பதவியாலே 8

ஆனந்தக் கூத்தாகி யழியாகண்ட
அத்தன்மை ஆத்மாவின் பகுதியாலே
தானந்த விதம்கிடைத்த யச்சடலத்தின்
தன்மை வெளிக்குக்காணு தயானந்தத்தின்
காண எப்படி மறைத்தும் பின் காலிவனும்
கருஉதித்து நூற்றைம்பான் வயது மேலே
தோணுமச் சடலமொரு பகுதியாகச்
சிற்றம்பலத்தி னருளமைப்புக் தோற்றும். 9

தோற்றுமது அவர்முத்தி யெக்யமாகச்
செய் பதியின் சபை யதனில் தெளிவாய் பிந்தி
வீற்றிடும் நாள் முன்னுரைத்த படியாந்தானே
இயல்பதாம்தே ரக்காலச்சடலம் குன்று
மாற்றிலா திருந்தஅறி வானயோக
மாயப்பிர பஞ்சமிலா மௌனமாக
வீற்றிருப் பதால்பேச் சமைப்புக்காட்டா
ஈது அதிசயமறி யிக்கலிகாலத்துள் 10

ஞாலபலன் தோற்றமென் றேயுரைத்தக்
கந்தன்மொழி ஈதறிவாய் கௌரி லோக
வாலைகேள் ஜாதகற்கு முத்திகொண்ட
வகையுடன் மற்றிவன் செயலும்வாது
கோலத்தும் மற்ற செயல் யானுரைக்கக்
கூடுவதல்ல, அதனால், காக்கேயன் ஞானம்
நூலைப்பார் விபரம் சொல்லும் இந்தமறையை
முன்னறிவான் வீரய்யா இது நூல் முற்றே. 11

ஸ்ரீ ஷண்முக விலாச ஜோதிடசாலையில்

எடுக்கப்பட்டது.

பாலக்கரை, திருச்சி.

17-9-1936.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

ஸ்ரீமத் வடலூர்

இராமலிங்க சுவாமிகள் ஜாதகம்

காக்கேயர் மகாவாக்கியம்

கணேசர் துதி

சிற்றம் பலத்தின் செயல் காணும் மானிடர்க்கு
மற்றம் பலத்திலுற மனம்வருமோ,—பற்றற்று
ஆதிபால் எண்ணம் கொண் டத்வீதம் கைப்பிடித்த
காதை சொல்லக் கணேசர்பதம் காப்பு.

திருவே யென் செல்வமெனச் சேயாய் ஞானச்
செழுஞ்சுடராய் நித்தியமாய் தேடிக் காணா
திருவே யென்றுரை பலரும் திகட்டா முத்தித்
தேவனாய் நிலைத்த பொருள்தேவ தேவே
திரு விளக்கே யெனவிளங்கும் திவ்ய ரூப
ஜெகஜ் ஜோதி மாமணியே தேடிக் காணாக்
திருப் பொருளைப் பணிந்து யோக நிஷ்டையாகச்
செய்திடும் காக்கேயனை உமையாள் ஓர் காலம். 1

காலமதில் கைலைக்கு வாவா வென்று
கருத இதைக் கர்க்கேயனுணர்ந்து அந்தக்
காலமதி லேயெழுந்து கடல் நீர் தோய்ந்து
கனலி உதி முகம் நின்று வெண்ணீறிட்டு
கால னைக் காலால் உதைத்த காள கண்டா
காட்சி கொடுத்திடும் தேவே யென்று அந்தக்
காலையிலே வணங்கிய பின் கயிலை யேகி
காளையவ னுத்தரவு பெற்று உள்ளேகி 2

உள்ளேகி யானுமையைத் தோத்தரித்து
உத்தமியெ னருந்தவமே ஒளியே யெங்கும்
உள்ளாகக் காண்பவளே உயர்வு தாழ்வும்
ஓர் நிலை யென்றுண்மை யுரைத்திடு மென் மாதா
உள்ளதிது காலெனை நீ வரவழைத்த
உண்மை யுரை யெனச் சத்தி யுவகை யோடு
உள்ளன்பாய் முன்கா லுரைத்த கந்தன்
உயர்வுள வோர்மறையை உன்னை யுரைக்கச் சொன்ன 3

சொன்னபடி யாலதனின் குறைநீ முற்றும்
தோற்றும் வகை சொல்லதனின் கிரகம் யானும்
சொன்னபடி யனுசரித்து இகபரத்தின்
தூய அமைப்புரை கேது கந்தன் கடகமீது

சுன்னவனின் தாதை கவிமின் சூர் சசி மால்
சுதனுயிர் மீன் சனியிடபம் குருயாழ் குந்த
சுன்னனுக்குப் பாக்கியத்தில் ராகு சேர் நாள்
சுபானு ஆண்டு கலி நாலாயிரத்திநேடு 4

உடன் தொளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டில்
உற்றிடும் பெண் மதி மூவேழ் தேதி முன் நாள்
இடம் துதிகை சித்திரையே யுதயநாழி
இருபத் தொன்பதுடன் விகடி யிருபத்தொன்று
இடமிதுவோ டாறு தர்ப்பரைய தாகும்
இதிலுதித்த பாலனவன் கதை சீர் முற்றும்
தடமுதித்த காலமும் முன் னகத்தின் செய்கை
சாற்றி யிடை விட்டதன் பின்னிக பரத்தின் 5

இகபரத்தின் செய்கையதை யுரைப்பா யென்ன
ஈஸ்வரியின் பதம் பணிந்து எல்லா மொன்ருய்
இகபரத்தி லமர்ந்த வுரு மூற் காலத்தில்
ஏற்பட்ட அம்ஸம் அரனுமைக்கும் மத்தி
இகமான வோர் புலனே கண்ட சோமாஸ்
கந்தனிது முன் ஞான சம்பந்தப் பேர்
இகபரத்தி னருள் கொண்டு பூவில் மானிட
இயல்பதாய்ப் பிறந்துமே தன்னுல் நீதி 6

நீதியதாய் சமணர்களை நீக்கி நல்ல
நிலையான நிலை கண்ட அப்பர் ஞான
நீதியதே யிக்கலிகால் மருதூர் தன்னில்
நிற்கருணை இராமலிங்கப் பெயரைச் சூடி
நீதிய மூலா யுதித்தச் சோதி யென்றே
நிகழ்த்திடலாம் வாசம் தில் லைப் பதியிலுற்றும்
நீதி யொரு மேடான வடலூர் தன்னில்
நிலத்தில் சிலர் காண யிவ ரடக்கமான 7

அடக்க மந்தப் பாவனை போல் சபையில்புக்கி
அமர்ந்த இந்த யோகத்திற் கிது நாள் மட்டும்
அடக்கமில்லை யென்றே யாம் அறைய வேண்டும்
அமைத விவ னில்லாத வுலகமில்லை
அடங்காது கண்டும் தனை யறியமாட்டா
அவனியிலே யிது சூட்ச மறிந்து கொள்ளு
அடங்காத மகிழ்ச்சி கொண்டு அமையுமிந்த
அன்பனுக்கு நூற்றிருபான் வயது மட்டும் 8

மட்டான சாரூப பற்றுக் கொண்டு
மயக்கத்தி லாழ்ந்திடுத லாகினும் தான்
மட்டிலா சாயுச்யப் பதவி காண
மற்ற விதமைந்தும் முன் சொல் காலம் போம் நாள்
மட்டும் சாயுச்யமதைக் கருதா பூவில்
மானிடராய்ப் பிறந்த பற்று அது வரைக்கும்
மட்டில்லா தமைவதினு லம் மார்க்கத்தில்
மைந்த னதுவரைக்கும் சாரூபம் கண்டு 9

கண்டதனைக் கைப்பிடித்து அதன் மேலாகக்
காணுதல் சாயுச்ய முறை தனக்களித்த
கண்ட நாதனை யிவனு மீதோ வென்று
கை கொட்டி நகைக்கு மிந்தக் கருணைவள்ளல்
கண்டவித மொரு கூற்று கலி காலத்துள்
காணுதல் சாரூபம் வரை கருது தற்கு
கண்டம் கண்டமாகக் காட்டு மிவ்வாறு
காணுது தனக்கது கருத்துள் தேரு 10

கருத்திதுதான் வாசிட்ட மறிந்தோர் தன்மை
காணுத லாகினு மிந்தச் ஜாதகற்கு
கரு உதித்து நூற்றி முப்பான் வருடம் தன்னில்
கண்ட பதி வடலூரில் காணத் தன்னை

கரு கண்ட மதியான மகர மாதம்
கருத்தாக அந்தியினில் கலக்க மில்லா
கருத்துடனே பிரகாசம் தோற்றி ஞானக்
கண்ணோடே காட்சி தரக் காணும் வேளை 11

வேளை பூச வுடு வன்று ஜோதி சிற்ப
விரிவான மயம் காட்டி மேனி மூடி
வேளையதில் திடீரெனத்தான் சுடரொளிக்குள்
இருக்கும் சில விகடி வரை யெதிர் நிற்கின்ற
வேள் ஆசை பிடித்த மானிடர்கள் முன்பு
வீதிகோத்திர மயமாய் மெய் மறக்க
வேளையிதில் காட்டிடவே ஞான மார்க்கம்
வீற்றிடுதல் சில பேர்க்குப் பின்னமைந்தும் 12

நம்மைப் பற்றி யிவர்க் கென்ன யிவர்க ளிங்கு
நாடியிருந்தே கூச்சல் போடும் பேயால்
நமக் கென்ன யென வெண்ணி சிலது நேரம்
நாட்டம் கொண்டதை விட்டு அகலும் போது
நம்மை நீர் பின் னெக்கால் காண்போ மென்று
நவிலும் மனவுறுதியைக் கொண்டறையும் நல்ல
நம் பற்று உள்ள பிற நாவே நீ கேள்
நன்னடையாய்க் கண்டொழுக்கம் நல்ல நெஞ்சம் 13

நெஞ்சே யெச் சபையு மொரு சபையாய்க் கூடி
நின்கருணை எனப் பூவில் எம்மதத்தும்
நெஞ்சுள் பதித் தெல்லோரும் கொண்டாடும் நாள்
நிச்சயம் யான் வெளி வருவே னதுவரை யுன்
நெஞ்சில் கூட யெனைப் பதிய வைத்திடாதே
யெனப்புகன்று அத்வீதச் செயலாய்ச் சொல்லும்
நெஞ்சை யென்ன சொல்வது யென்னம்மா நித்ய
நிரந்தரமே அதற்கென்ன அந்தக் கண்ணீர் 14

கண்ணீர் விட்டே யுரைக்கும் காணையானக்
காசினியில் பிறந்து யிவ்வாறாய்க் கண்டால்
கண்ணீர்தான் வருமே காஞ்து துக்கம்
காண்பிதனைத் தாய் கேட்டால் விழிகள் மங்க
கண்ணீர்கள் வாராதோ வந்தா லந்தக்
கழிவான நீர் மோட்சப் பாதை யல்லோ
கண்ணால் தான் அகமும் இகபரமும் மற்ற
காரிய மல்லால் மனதி லேது கண்டாய் 15

ஏதுவென்று சொல்வதற்கு முடியா வேதம்
இருப்பினும் சூல சூக்கு மத்தை மனதுள்
ஏதுவாய்க் காண்பதது விழிதான் அதற்கு
விக்கிரக ஆராதனை முக்கியமாகும்
ஏதுவாய் வரு மென்று எமது ஞானம்
ஈளசத்தனமிச் ஜாதக னருளா மவ்வாறு
ஏதுதான் வாராது கண்கள் மாத்திரம்
எங்கும் பார்க்காத படி கட்டி விட்டு 16

விட்டிடா புத்தி யொரு நிலையாய் மனதுள்
இசைப்பீரானா லுனக்கு ஏதுவும் சித்தி
விட்டிடாதே எதிலு மிசையாய்க் கொண்ட
இராமலிங்க சுவாமிக ளென்றிருப்போர் மனதுள்
விட்டிடா வாழு மொரு தெய்வ மென்று
நீ நினைத்தா லெப்படியும் அருளுண்டது தேர்
விட்டிடா திதன் குறை நீ யறி மேலானால்
இம்மறையை யெவர்க்கும் நீ காண்பித்தோ பின் 17

காணி லதற்காக பொருள் கைக் கொள்ளாதே
கருத்துன் போல் மற்றவரும் கருத்துள் முற்றும்
காணும் படி செய்வதுதான் சிலாக்கிய மல்லாற்
கருதி பிரதிலா பத்தைக் கருதிடாதே

காண பொருள் வாங்கிடினி லிந்த ஜோதி
கருணையிடம் கடன் பட்ட அமைப்பா மீது
காணுவாய் முக்கிய மிதே கர்க்கையானும்
கழறினம் இது நிற்கச் ஜாதகர்கு 18

ஜாதகர்க்கு இனி மேலே அகத்தின் சங்கை
சாற்றிடுவேன் பாலியத்தே இந்த மைந்தன்
போதிய ஞானப் பயிற்சியா யமைப்பு
புகன்றாலும் தன் தமயன் பிடிவாதத்தால்
தீதென தன் மனங்கலங்கி யொரு மாது தன்னை
தேடி மணம் செய்திட்டார் தெரிவை வந்தும்
நீதி யென மணம் கொண்டதில்லை யல்லாது
நீணிலத்தி லொரு விகடி கூடப் பற்று 19

பற்றதனைக் கைப்பிடியாப் பான்மை கண்ட
பாலன் பிர பஞ்சமதைக் கைவிட்டதனை
முற்று மாச்சரியத்திலு மாச்சரியம் தான்
முக்கிய மீதா மறியே மொழியக் கேளாய்
உற்றதிவன் பூஜைகளும் அருட்பா பாடி
ஓராறு முகத்தோனை யுள்ளன் போடு
குற்றமில்லாப் பூஜித்த மனித ரூப
குழந்தைகளில் கலி நாலாயிரத்தி லோர்வன் 20

தானிருந்து மினி இரண் டோர் பேருண்டாந்த
சாமிகளில் ஒருவனுமே செட்டியாகும்
காணு மவன் பொரு ளெல்லா மரன் பால் தியானம்
கைங்கரியம் கொண்டு பூவோர் களிக்கக் கைகால்
வேணுமென்றே பிரித்துச் சேர்ப்பா னதுவும் நிற்க
வேரிரண்டோர் பேர்களில் பின் விரிவு இல்லை
மோனம் கண்டாலும் தன் போல் திரேகம் காண
முடியதி விவ னையல்லால் வேறில் லைதான் 21

தானதுவும் நிற்க இந்தச் ஜாதகன் தன்
தந்தை யவன் ராமையா பிள்ளை யென்பார்
மோனமவன் பக்தி யெல்லா மீசன் பாலில்
முக்கியமாய்க் கொண்டாலு மக மிருந்தே
மானைக் கரம்பிடித் தவன் பாதம் போற்றி
மார்க்க முறக் குருவான வேலை கண்டு
காணுமவன் சுக ஜீவனமாய்க் காலம்தள்ளி
கணக்கதாய் கருணீகரின் குலத்திலுற்ற 22

உற்றுவாழ்ந் தொன்றிரண்டு மூன்றுநாலைந்து
உத்தமியை மண முடித்தும் ஒன்றும் பற்றி
பற்றுது போக மனம் பதர விட்டும்
பாராதுபின் னரனருளால் ஆறுந் தாரம்
குற்றமிலா சின்னம்மாள் என்ற மாதை
குறித்து அகத்தாளாய் அம் மங்கை யொற்று
சற்றும் நீதி பிசகில்லா வாழ்ந்து முன்பு
சபாபதியைப் பெற் றெடுத்தா ரதன் பின்பாக 23

வேறு சந்தம்

பின்னே பரசு ராமனென்ற பிள்ளை பெற்ற வதன் மேலே
கன்னி யொன்று சுந்தரமே காணப் பின்பும் மற்றரிவை
அன்னளுதித்து மகிழ்வோடு ஆயா ளப்பன் வாழ்காலம்
முன்னே செய்த நற்பலனல் முனிபோல் தேசி ஒருவனுமே 24

ஒருவ னரனுய்த் தான் வந்து "உன்னு முலையைப் பெற்றவளே
பெறுவாய் பின்னோர் மகவத னைப் பிள்ளை ஞானக் கடலாக
வருமே யெனக்கு ஆகாரம் வாய்த்த புண்ணியம் சின்னம்மா
பொருமை யுனக்கு வாய்த்தாற் போல் பிள்ளை விசேட மளித்திடுமே

அந்தவாறு வுன் கர்ப்பம் அடைதல் முந்தின ஜென்ம பலன்"
இந்தவா றென் றவ னேதி எகினனே யதன் பிந்தி

மைந்த னொன்றை ஈன் றெடுத்த மதலைதான் நல் மார்க்கமுள்ள
இந்த மைந்தனுகுமது இராமலிங்கம் பின் சாமி 26

சாமியுற்ற தாய் தந்தை தவப்பயனென்று இவனைமிகப்
பூமி போற்றும் என் றதிகப் புகலாய் வளர்ந்தும் அயணம் மேல்
காமித்திடவே தந்தை உயிர் கரக்கப் பிந்தி கலக்கமதாய்
வாமி செயலெனத் தாய்வீடே வாழ்ந்தார் சிலநாள் பொன்னேரி 27

பொன்னே விளைந்த பூமியது பிள்ளை யிவர்களைத் தாங்காது
இன்னோர் ஊர்க்கு ஏசென்று இசைக்கும் படியாய் நேரிடவே
முன்னோன் பார்த்து ஈதெல்லாம் முன்னூழ் பயனென்றே நினைத்து
பின்னோ னுடனும் இவனுடனும் பெண் சோதரத்தோடே சென்னை

சென்று வாழ்ந்தே யிவன் கல்வி தெரிந்தா னுத்தம சீலனிவன்
அன்றே கஞ்சிப் பதிவாழும் அண்ணன்பேர் போலுள்ளவன் பால்
நன்றே கல்வி கற்றாலும் ஞானக் கல்வி தன்னாலே
இன்றே தொட்டு வந்திடவே ஈது பின்பு பலசெயல்கள் 29

செயல்கள் தீபம் நீராலே செழுஞ்சுடராக யெரிந்தது காண் [யே
பயம்கொண்டோர்க்குப் பயமேனோ பாதை யொன்றுண் டதைப்பிடி
துயர் போமென்று வழிகாட்டி ஜோதி யான சூட்சத்தை
நியமே பாரென பலவாறு நிகழ்த்தும் மார்க்கம் குருவாக 30

குருவாய்க் கண்ட வகையோடு கூடும் தன்னால் நிகழ்ந்தவைகள்
அருள வெளி விம் மறைபோதா ஆதே ஞானக் கலைபோலே
பெருகு மம்மா இப்படியே பிறந்த காதை யகப்பற்றை
ஒருவ ராலும் பூராவும் ஓத முடியா தறிவாயே 31

அறிவாய் ஞானக் கலையாகி ஆதிபாலே யெண்ணமது
தெரியக் கொண்டு மார்க்கமதைத் தேடி வருவான் பாலியமே
உருவே உருவின் னொளியான ஓங்காரத்துள் நின்றாடும்
குருவைக் கண்டு தான் மகிழ்ந்து கூடிவரும் நாளிதை மற்றோர் 32

மற்றோர் அறியா மார்க்கத்தால் மாதை யிவர்க்கு அகத்தாளாய்
பற்றுக் கொள்ளப் பிரயாசை பார்த்தே பின்பு தமையனவன்
முற்றும் தன்னேக்க மறியா முன்னோர் ஆக மத்தின்படி
உற்றார் தனக்கு நிகரான உத்தமி யொன்றை தரன்பார்த்து 33

தனக் கன்றலா தந்தத் தையல் அக்கை மகளான
இனிதே உண்ணுமுலே சேயை ஏற்கும் தனமே யம்மங்கை
பணிவே நல்ல சாது மனப் பர்த்தா சொல்லே பதிவிரத
மணியேயென்று வாழ்ந்தாலும் மங்கை வந்த வகை நினைத்து 34

இவனு மேங்கி ஆகாகா ஏது மோசம் யாம் போனோம்
தவறி விட்டது காரியமே தமயன் சொல்லைக் கேட்டதினல்
இவையா லென்ன ஒரு வகைக்கு இதுவும் நன்மை யெனத்தேரி
சிவனின் பாத மடிதொழுது சேர்ந்த கன்னியை கயர் கட்ட 35

கட்ட தொட்டது அல்லாது காணுன் அவளைப் பற்றி யிவன்
தொட்டகுறை யென்றதை விட்டுத் தொடர்பை நீக்கச் சிலகாலம்
விட்டு யிருபத்தை யுள்ளே வெளியேறினன் தான் ஞானமுறை
தட்டுக் கெட்டு வருவபவர்க்குத் தானே உபதேசம் மொழிந்து 36

மோழியே கொண்டும் மொழியான மூர்த்தி பாதம் தான் போற்றி
வழியே அருட்பா பாடியதில் வாட்டம் மருட்பா வென்றோத
முழியே யிருந்து மிப்படியே மொழியும் மூடா மொழியக்கேள்
பழிநீ யிப்படிக் கூறுது பாவைப் பாரது பாமொழியே 37

முற்றும் அறியா மூடர்போல் மொழிந்தாய் முற்றும் கெட்டவனே
பற்று வதனுல்நமக் கொன்றும் பாக்கள் யிறங்கா பழியில்லை
குற்றம் சொன்னல் நமக்கென்ன கூறுதிருந்தா லெனக்கென்ன
கற்று அறிந்தோர் காண்பார்கள் கருத்தை யென்று இவனிருந்தும் 38

இருந்தோர் பூவோர் வெள்ளசமே ஏகியது போல்தனை யெருவார்
பொருந்தா பாக்கள் பாடி விட்டான் புகலவே யிடமில்லை யென்று

வருந்தச் சொல்லி மனம்போலே வரைவா ரதன் படியால் தானும்
அருந் தமிழாகச் சொன்ன மொழி அருட்பா வென்று யாவர்களும் 39

அறியும் பொருட்டே வாதேகி அங்கு கூடியிருக்கும் நாள்
வரவை யெல்லோ ராதிமுதல் வந்தனம் செய்த வாஞ்சையினுல்
குறைவில்லை தன் பாட்டிலெனக் குறித்தார் நீதி பதிதானே
பொருளே யாவரும் பொருள்கொண்ட புண்ணியமூர்த்தி தானென்று

என்று வணங்கி யிப்பாலன் இறைவன் போலே இறைவனதாய்
சென்று மனம்போல் தானலைந்து சிலகாலம் மட்டும் உலகோர்க்கு
நன்றே யோகி யிவனென்றே நவில யாரும் கண்காணு 41
அன்றே தனக்கு ஐம்பத்தோர் ஆண்டே யடுத்து வடலூரில்

வடலூர் பதியே சிற்சபையாய் வாதசாரதி மயமாக
நடவே போயிதான் மறைந்த நாளே பூசம்மான் மதியே
திடமே யாரும் காணுது சிற்றம்பலத்தி லிருப்பதுபோல்
தடமே யில்லா இடமாகித் தங்கி வாழும் ஜாதகனே 42

சாதகப் பலன் இப்படியே தனக்கு நூற்றி முப்பானில்
ஆதேமகரம் பூசவுடு அந்திநேரம் அக்காலம்
ஜோதிப் பிரகாச மயமாய்த் தோற்றுவாரே உடல் மூடி
சாதிப் புட்பம் வாசனை போல் தங்கும் சுடரொளித் தன்மையதாய்

ஆதேஆறு நாழிவரை அகத்தில் மகிழ்ச்சி யோடதிக
சீதேவிப் பலனுய் காட்டத் தெருந்திட்டாலும் மௌனமதே
தோதே சுழிமுனை மார்க்கத்தைதுடர்ந்து பூவோர்க்கு காட்சி தரும்
போதே நீங்கள்பேய் உலகப் புற்றை நம்பும் பொய்யான 44

பொய்யாக் கண்டபுகழில்லா பொருப்பு காண் மானிடமிச் சடலம்
மெய்யே யென்று எண்ணுதீர் மிக்கஅதனைக் கழுவிவிட
துய்ய பலன் தான்னச் சடலம் சுகமா மதற்கு யீடுபடு
வெய்யோன் ஒளிதரும்இகபரத்தின் இயல்பே யுனக்குச் சாதகமே 45

சாதக மென்றே ஓர்வார்த்தை சாற்றி மறைவா ரதன்பிந்தி
தோதே யவரைக் காண்பதற்குச் சிலநாள் போகவேண்டும் தேர்
ஆதே யதனுள் பூவதனில் அரசர் பகையும் உள்நாட்டில்
மாதின்பற்று மார்க்கத்தால் மரண மதிகம் பலவாறு 46

பலதே காண்ப தோடல்லாற் பாரில் சாதிபேத மிலா
நலமே யாரும் சமமாக நாடி மதமும் அற்று விடும்
கலகமிதற்கு உண்டாகும் காணும் வகையால் இறப்பவர்கள்
தலத்தில் நானூற் பெயர்க் கொன்றே சாவர் அதன்பின் சிலகாலம் 47

சிற்றே பற்றுக் கோட்டமதில் சிதறி அரனுமை யேதென்று
முற்றும் பொய்யே முனிவள்ளல் மொழிய ஒன்றுமில்லை யெனப்
பற்றிச் சொல்லும் காலம்யாம் பலபேரறியப் பூவதனில்
உற்றேஞான உபதேசம் ஓதிக்கோட்டம் நிலைப்பும்பெற 48

நிலைக்கச் செய்வோம் அதுகாலம் நிலத்தில் எல்லா மதத்தினரும்
தலைவனிவனே சத்விஷய சால்புவாக விளங்கிடுவன்
கலையாய்க் கண்ட கண்ணோட்டக் கருத்தே ஈது காக்கையனும்
விலைக் கீடாகா பொருளதனை விளம்பினேனே யம்மணியே 49

அம்மா ஈது முற் பாகம் அரைந்தேன் பொதுவாய் இனிமேலே
இம்மான் ஞான மார்க்கமதை எவ்வாறு கண்டா னதுடனே
சம்மா விபர மார்க்கமதும் காணும் பூவில் வரும் தினமும்
தன்மை அதுகால் யார் காண்பார் தனக்குச் சீடர் மார்க்கமதும் 50

மார்க்கம் விரிவுமாதே கேள் மைந்தன் ஞானக் கலைதன்னை
எற்கும் யிரண்டாங் காண்டத்தில் இசைப்பேனுதி சாமளையே
பார்க்கும் எந்த இடமெல்லாம்நீ பதிவாய் ஒருநிலை தான்கண்ட
தீர்க்கம் பலன்கேள் உமைமாதாதேவி காக்கையன் யானுரைப்பேன்

முதற்பாகம் முற்றிற்று

ஸ்ரீ ஷண்முகநாதன் துணை

இதன்குறை இரண்டாம் பாகம் பாருங்கள். கூடிய சீக்கிரம் வெளிவரும்.

ஆர். ஜி. பிரஸ், நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, சென்னை.

குகமயம்

ஸ்ரீ ஷண்முக விலாச ஜோதிட சாலை.

பாலக்கரை, திருச்சிறுப்பள்ளி

ஆதிகால ஏட்டோலைப் பிரதிகளில் கந்தர்நாடி, காக போஜண்டவாக்கியம், நாரதர்வாக்கியம், சுகர் நாடி வாக்கியம், கௌசிகம், முதலிய வாக்கியங்களைக் கொண்டு ஒவ்வொரு ஜாதகத்திற்கும் தாய், தந்தை ஜாதகர் நாமங்களும் பாட்டன் கால நிலமை மாமன் வர்க்கம், சகோதர பாகம், களத்திர பாகம், புத்திரபாகம், யோகபாகம், தொழில் அல்லது உத்தி யோக விஷயம் - ஆயுள்வரைக்கும் திசை புக்தி ரீதியாகவா வது-சித்திர பலனுகவாவது அல்லது வருஷம் மாதம் வார மாக பூரா விவரங்களும் மிகத் தெளிவாகக் கூறுவதோடு முற் பிறப்பு பின் ஜென்மங்களைச் சொல்வது மிக்க ஆச்சரியகா மாக இருக்கும்.

முக்கிய விஷயம்.

ஜாதகம் இல்லாதவர்க்கு கை ரேகைசாஸ்திர மூலமாய் அவரவர் பிறந்த வருஷம் மாதம் தேதி நட்சத்திரம் உதய நேரம் லக்கினம் கிரகங்களும் - ஐந்தைந்து வருஷபலனுக ஆயுள்வரை சொல்லப்படும்.

சார்ஜ் மற்றவிபரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

M. R. ஆறுமுகம் பிள்ளை

மானேஜர்.

சென்னை

சமரச சுத்தசன்மார்க்க சங்கத்தின் நூல்கள்

100, அம்மன் கோவில் தெரு, ஒற்றவாடை போஸ்டு
சென்னை.

1. திருவருட்பா முழுப்புத்தகம் 2 வால்யும் பட்டுபைண்டு உயர்ந்த பதிப்பு ரூ. ... 6 0 0
3. திரு ஆயிரம் (ஆயிரம்பாடல்கள் 7-வது பதிப்பு 336 பக்கங்கள் கொண்டது ... அணா 2, 2½, 0 4 0
3. சுவாமிகள் திவ்ய சரித்திரம் 2-வது பதிப்பு 0 2 0
4. அருட்பெருஞ்ஜோதி அகவல் திருவடிப்புகழ்ச்சி 0 1 6
5. ஜீவகாருண்ய ஒழுக்கம் 3-பாகம் அணா 0 1 6, 0 2 0
6. திருஅருட்பா விருத்தியுரை ஜீவகாருண்ய ஒழுக்கமுதல் மகாதேவமாலை உட்பட 6-பாகங்களின் விளக்கஉரை 384பக்கம் 0 12 0
7. மகாதேவமாலை முழுதும் விருத்தியுரை 0 6 0
8. ஜீவகாருண்ய ஒழுக்கமுதல் சிவநேசவெண்பா 0 6 0
9. இங்கிதமாலை விருத்தியுரை 0 2 0
10. மனுமுறை கண்ட வாசகம் 0 2 0
11. மகாதேவ மாலை மூலம் 0 0 6
12. கீர்த்தனை, நாமாவளி, திருவடிப்புகழ்ச்சி, விநாயகர் திரு அருட்பா, வடிவுடை மாணிக்கமாலை, கந்தப்பெருமான் தெய்வமணி மாலை தனித்தனி ... 0 0 3
13. உண்மை நெறி, ஸ்ரீராமர் திருவருட்பா, பாராயணத் திருவருட்பா 100க்கு அணா 8 தனித்தனி 0 0 1
14. நடராஜர் திருவருட்பா, குமரன் திருவருட்பா தனித்தனி 0 0 6

திரு உருவப் படங்கள்

15. சுவாமிகளின் அழகியதிருவுருவப்படம் உயர்ந்த வழுவழுப்பான தடித்தகடிதம் 2-கலரில் 15"x20" சைஸ் 0 2 0
ஷை சிறியசைஸ் 0 0 6 0 1 0 0 1 6
16. வடலூர் ஞானசபை; தருமச்சாலை; சித்திவளாகத்திருமாளிகை; சுவாமிகளுக்கு ஆட்பட்டமாமரம் சாலைச்கிணறு;
உண்மைநெறிபடம், செட் 1க்கு ... 0 4 0
ஷை தனித்தனி 0 1 0
திருவாசகம் பாக்கெட்சைஸ் 0 2 6
திருக்குறள் பாக்கெட் சைஸ் (மூலம்) ... 0 4 0